2014 பிப்ரவரி 1]

30—

மாணவர் விடுதி

***37113—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, காஞ்சி மற்றும் ஏலத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நல விடுதிகள் ஒவ்வோர் ஆண்டும் தேவையின் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் துவங்கப்படுகின்றன. எனவே, புதிய விடுதிகள் திறப்பது குறித்து வரும் காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவுகள் எடுக்கும்போது, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சி என்னும் இடத்தில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதி துவக்குவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும்.

ஏலத்தூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மட்டுமே செயல்பட்டு வருகிறது. அப்பள்ளியில் மொத்தம் 77 மாணவர்கள் பயின்று வருகின்றனர். பள்ளி விடுதியைப் பொறுத்தமட்டில், 4 ஆம் வகுப்பிலிருந்து மாணவர்கள் விடுதியில் அனுமதிக்கப்படுவதால், ஏலத்தூர் கிராமத்தில் புதிய விடுதி துவக்கப்படும்பட்சத்தில் போதிய மாணவர்கள் சேர வாய்ப்பில்லை. ஆகவே, அங்கே புதிய விடுதி துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, காஞ்சி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக மாணவர் விடுதி அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்று அறிவித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முனனேற்றக் கழகம் என்னும் ஆலயத்தின் ஆராதனைக்குரிய தெய்வமே! அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 1½ கோடி தொண்டர்களின் நாடி நரம்புகளிலே சங்கநாதமிட்டுக்கொண்டிருக்கிற கழகத் தொண்டர்களின் காவல் தெய்வமே! 7 கோடி தமிழக மக்களின் உள்ளங்களிலே வசந்தத்தை பொதிகை மலைத் தென்றலாய் தந்து கொண்டிருக்கும் எங்களின் உயிர் ஓவியமே! எதிரிகளின் பாய்ந்து வருகின்ற ஈட்டிமுனை தாக்குதல்களைக்கூட நெஞ்சுரத்தோடு எதிர்கொள்கின்ற அறிவையும், ஆற்றலையும், வீரத்தையும், விவேகத்தையும் ஒருங்கே பெற்றிருக்கின்ற வீரத்தின் விளைநிலமே! வெற்றியின் திருமகளே! செந்தமிழை சீர்மணக்கச் செய்திட்ட செந்தமிழின் சந்தனமே! செந்தமிழ் நாடு சிறப்புறவே, செயல்படும் அறிவே, ஆற்றலே, வீரமே, விவேகமே! பொன்மனச் செம்மலின் புகழ் வடிவே! வரலாற்றுப் புகழ் தொடரே! பண்பின் தொகையே! பாசப் பெருமழையே! வளர்பிறையாய், முழு மதியாய் வந்துதித்த பெருந்தவமே! என் தாரக மந்திரமே! அடக்க நினைத்தால் ஆர்ப்பரிக்கும் சிங்கமாய், வணங்கித் துதித்தால் வரமளிக்கும் அன்னையாய், நிறைந்த புகழால் உயர்ந்து நிற்கும் தேசியத் தலைவியே! பகைவர்களின் கூடாரத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தி, போர் முரசு கொட்டி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலேயிருந்து டெல்லி செங்கோட்டையிலே பூபாளம் பாட (மேசையைத் தட்டும் ஒலி) புறப்பட்டுவிட்ட எங்கள் பிரபஞ்சத்தின் வெற்றித் திருமகளே! ஏழ்மையும், இல்லாமையும், கல்லாமையும் தமிழக மக்களின் தலைவிதி என்றால், அதை மாற்றி அமைத்தவர் வாழும் பிரம்மா, எங்கள் அம்மா! அனைவருக்கும் விலையில்லா அரிசி வழங்கி அருட்பணிபுரியும் அன்னபூரணியே, இல்லாமை இல்லாத நிலை வேண்டி, நல்வளமை உருவாக்கும் எங்கள் அருந்தமிழே, தொட்டதை துலங்கவைக்கும் எங்களின் தூய தலைவியே, பார்வையில் பட்டதை ஒளிரவைக்கும் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஒப்பற்ற தலைவியே, அரசியலின் அகரமே, அறிவுலகின் சிகரமே, இன்றைய தமிழகமே, நாளைய பாரதமே, தாயே,

2014 பிப்ரவரி 1]

(மேசையைத் தட்டும் ஒலி) தமிழே, தன்னிகரில்லா தன்மானத் தலைவியே, தந்த வாய்ப்பிற்கு நன்றியோடு வணங்கி அமர்கின்றேன்.

முற்பகல் 11—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு. ஆர். மனோகரன் அவர்கள்.*

***திரு. ஆர். மனோகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட இருக்கின்ற இந்த 2014 ஆம் ஆண்டு முதல் கூட்டத்தொடரில் ஆளுநர் உரையின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகின்ற அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய கழகத்தின் காவல் தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, எனது உரையைத் துவக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களைப் பிளவுபடுத்தும் மதவாத அச்சுறுத்தல்களை வேரறுத்து, மாநிலத்தின் உரிமைகளை முன்வைத்து, முழுமையான மக்களாட்சியை உருவாக்க, புரட்சித் தலைவர் கண்டெடுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் வைர வரி கழகத்தின் பெயருக்கான முழுமையான காரணம் நிறைவேற்ற, கழகத்தின் காவல் தெய்வமாய் விளங்கி வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நாற்பதையும் வென்றெடுத்து, நாடாளும் பிரதமராகி, பாராளப் போகிறார் என்ற செய்தி